தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 13, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034
2003 மார்ச் 27, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு."

ஆட்சி முறையில் அறம் தவறாமல், அறம் இல்லாத தீய செயல்களைத் தவிர்த்து வீரத்தில் குறைவுபடாது, மானத்தைப் பெரிதும் மதித்துப் போற்றும் திறமை கொண்டதே சிறந்த அரசாகும்.

(384)

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கற் குறிப்பு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி அவர்கள் 3-3-2003 அன்று மறைவுற்றதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி அவர்கள் 1959-ல் நடைபெற்ற இடைத் தேர்தலில் வெற்றி பெற்று, 1962 வரையிலும், 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் அருப்புக்கோட்டை தொகுதியிலிருந்து 3 முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றி உள்ளார். இம்முன்னாள் உறுப்பினரின் மறைவினால் அவரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள்.

வினா எண்கள் 101, 102 ஆகியவை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கத் தள்ளி வைக்கப்படுகின்றன.

வினா எண் 103, திரு. கி. பாரிமோகன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

103—

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

***7856—திரு. கி. பாரிமோகன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியுடன் 1975 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.